31st January 1972]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தலைவர் அவர்களே, மைசூர் மாநிலத்தி லுள்ள பந்திப்பூருக்கும் முதுமலைக் காட்டிற்கும் இடையிலே பெரிய சீரமைப்புத் திட்டம் ரூ. 90 லட்சம் ரூபாயில் அமைக்கலாம் என்று மத்திய சர்க்கார் கூட வெளிநாட்டிலிருந்து நிதி பெறக்கூடுமென்று சொல்லியிருக் கிறார்கள். அது தொடர்பாக மத்திய சர்க்காருடன் கடிதத் தொடர்பு நடக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : வெளிநாட்டிலிருந்து அல்லது வெளி மாநிலங்களி லிருந்து புலி, சிங்கம் போன்ற பிராணிகளை வரவழைத்து முதுமலைக் காட்டில் விடுவதற்காக அபிப்பிராயம் உண்டா ? அதைப் பார்க்கப் போகிற பயணி களிடம் கட்டணம் வசூலிப்பதாகச் சொன்னார்கள். அது மாதிரி திட்டம் பரிசிலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : கட்டணம் இப்போதும் இருக்கிறது. மிருகங்கள் சிறுத்தை, மான்கள், காட்டெருமை எல்லாம் இருக்கின்றன. சிங்கம் தான் இல்லை. இப்போதிருக்கிற மிருகங்களைப் பராமரிக்க வேண்டுமென்பதற்கா கத்தான் இந்த சீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, out of this expenditure of 90 lakhs of rupees, how much is proposed to be spent on wild animals?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தனியாக இல்லை. மொத்தத்தில் திட்டத் தில் இருக்கிறது. தனித்தனியாகக் கணக்கில்லை.

Surplus of Temple Funds and Charitable Endowments

* 74 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the amount diverted from the surplus of temples and charitable endowments in the State for renovation of temples and to Public Welfare Schemes yearwise from the year 1967?

கோயில்கள், அறக்கட்டளைகளின் உபரிநிதிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்திலுள்ள அறக்கட்டளைகள், கோயில்கள் ஆகியவற்றின் உபரி நிதிகளிலிருந்து பொதுநலத் திட்டங்களுக்காகவும், கோயில் திருப்பணிகளுக் காகவும், 1967 முதல் ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு தொகை செலவழிக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

ஆண்டு.	திருப்பணி.	கல்வி.	மருத்துவ மனைகள்.	அனாதை இல்லங்கள்.
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1967 ..	1,74,854·00	5,61,551·00	—	1,04,512·28
1968 ..	2,09,773·00	12,13,301·79	—	18,000·00
1969 ..	1,62,431·00	7,39,200·00	6,500·00	20,340·00
1970 ..	6,30,624·00	28,39,635·35	1,02,000·00	1,09,868·47

[31st January 1972

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த அறக்கட்டளைகள் கோயில்களிலிருந்து வருகிற பணத்தின் ஒரு பகுதியைத் திருப்பணிக்கும் திட்டத்தட்ட அதைப்போன்ற நான்கு பங்கு பொது நலத் திட்டங்களுக்கும் செலவிடுவதாக அறிகிறேன். இதில் திருப்பணிக்காகவும் பொதுநலப் பணிக்காகவும் செலவிடுகிற பணத்திற்கான சதவிகிதம் ஏதாவது வைக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சதவிகிதம் என்ற முறையில் நாம் செலவழிப்பதில்லை. இந்த நிதியிலிருந்துதான் கல்வியாக இருந்தாலும், மருத்துவ மனையாக இருந்தாலும், இது போன்ற பொதுக் காரியங்களுக்குச் செலவு செய்கிறார்கள்.

திரு. எம். அய்யாசாமி : சில ஆலயங்களில் முடி இறக்குவதன் மூலமாக வருகிற வருமானத்திலிருந்து முடியிறக்கும் தொழிலாளிகளுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் கல்வி வேறு பல வசதிகளுக்காக உதவி செய்யலாம் என்ற உத்தரவு முன்பு இருந்தது. இப்போது அது அமுலில் இருக்கிறதா? இருந்தால் அதன் பலனை எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்தத் தொழிலாளிக்கு இந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, முடியிறக்குகிற தொழிலாளிகளுக்குத் தேவையான சம்பளம் நாம் கொடுக்கிறோம். ஆண்டு தோறும் அவர்களுக்குப் போனஸ் வழங்கப்படுகிறது. ஆனால் அவர்களுக்குத் தனியாகச் சலுகையில்லாமல் எல்லாப் பிரிவினருக்கும் அந்தச் சலுகையைக் கொடுக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : பொதுநலத் திட்டங்களுக்கு அறநிலையங்களிலிருந்து கொடுக்கிற பணத்தைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை. பல கோயில்கள் இன்னும் பழுதுபட்ட, புதுப்பிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கும் போது, அவற்றிற்கும் இந்த நிதியை அளிக்கும் வகையில் வருகிற வருமானத்தில் 50 சதவிகிதத்தை திருப்பணிக்காகவும் 50 சதவிகிதத்தை பொதுநலத்திட்டத்திற்காகவும் கொடுக்க அரசாங்கம் யோசனை செய்து ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கல்வி மருத்துவமனை போன்ற காரியங்களுக்கு நாம் செலவு செய்கிற காரணத்தால், திருப்பணி வேலை எந்த வகையிலும் தடைப்படவில்லை. 1967-க்குப் பின்னால் 1970-ம் ஆண்டு முடிகிற வரையில் சுமார் மூன்று கோடி ரூபாய் ஆலய நிதியிலிருந்தும் அரசாங்க உதவியிலிருந்தும் செலவழித்திருக்கிறோம். வருகிற ஐந்தாண்டு காலத்தில் சுமார் நான்கு கோடி ரூபாய் ஆலய நிதியிலிருந்தும் நாம் செலவு செய்கிறோம். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்தால், ஆண்டுதோறும் 50 ஆயிரம் ரூபாய் அளவுக்குத் திருப்பணிக்கு அரசாங்கத்தில் ஒதுக்கினார்கள். கடந்த மூன்று ஆண்டு காலமாக ஆண்டுதோறும் 4 லட்சம் ரூபாய் அரசாங்கத்தில் ஒதுக்கியிருக்கிறோம். இந்தக் காரியங்களுக்குச் செலவு செய்கிற காரணத்தால், திருப்பணிகள் எந்த வகையிலும் தடை படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அண்மையில் கோயிலைப் பொறுத்தவரையில் சித்த வைத்திய டிஸ்பென்சரிகள் வைத்து ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட வருமானமுள்ள கோயில்களில் மருத்துவர்களை நியமித்தார்கள், 20 மருத்துவர்களை நியமித்துவிட்டு அவர்களில் மூன்று பேரைத் தவிர மற்றவரை சம்பளம் கொடுப்பதற்கில்லை என்று திருப்பியனுப்பிவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இது உண்மையா?

31st January 1972]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படித் திருப்பியனுப்பப்பட்ட தகவல் வெளிவரவில்லை. சித்த வைத்திய மருத்துவமனைகள் பல கோயில் களில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நாம் எண்ணியிருந்தோம். பல கோயில் களில் ஆரம்பிக்கப்பட்ட சித்த வைத்திய மருத்துவ மனைகள் வெற்றிகரமாக நடைபெறாத காரணத்தால், அதை ஆராய்ந்து வெற்றிகரமாக நடைபெறுகிற இடங்களில் மட்டும் சித்த வைத்திய மருத்துவமனைகளை ஆரம்பிக்கலாம் என்று தற்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether there is any proposal to prepare a State cadre of all employees of the Hindu Religious and Charitable Endowments Board and to give them uniform scales of pay and whether the surplus of this amount would be utilised for this purpose?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது அப்ப டிப்பட்ட உத்தேசமில்லை.

Subramanya Temple, Tiruchendur

* 75 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that there is a threat of sea erosion on the Subramanya Temple, Tiruchendur and its Eastern wall; and

(*b*) if so, the action taken by the Government in this regard?

சுப்பிரமணியர் கோயில், திருச்செந்தூர்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலுக்கும், அதன் கிழக்குப் பக்கச் சுவருக்கும் கடல் அரிப்பு அபாயம் இருக்கிறதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) கடல் தடுப்புச் சுவர் கட்டவேண்டிய அவசியமில்லை என்றும், ஆனால், கருங்கற்களையும், மணலையும் போட்டுக் கொட்டிவைப்பதன் மூலம் கிழக்குப் பிரகாரத்தை நீட்டித்தாலே போதுமானது என்றும் வல்லுநர்கள் கூறுகிறார்கள். ரூ. 3.5 லட்சத்திற்கான மதிப்பீடு தூத்துக்குடி துறைமுகத் திட்டத் தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு இந்து சமய அறக்கட்டளை துறை ஆணையாளரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தேவஸ்தான நிதி களிலிருந்து இவ்வேலை செய்யப்பட விருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்த மதிற்சுவர்களில் கிழக்கு வடக்குப் பகுதி களில் கடல் அலைகளினால் இடையூறு ஏற்படுகிறது என்று அதைத் தடுப்பதற்குத் திட்டமிட்டு மத்திய அரசினிடமிருந்து ரூ. 11 லட்சம் கேட்டோமே அப்படி மத்திய அரசிடம் ரூ. 11 லட்சம் கேட்ட பிறகு, இப்போது அதற்கு மூன்று லட்சம் போதுமென்று கருத்து எப்படி வந்தது என்று அறிய விரும்புகிறேன்.